செ.வெ.எண்: 32 நாள்: 13.09.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் அரசு கலை மற்றும அறிவியல் கல்லூரியில் முதுகலை மாணவர் சேர்க்கைக்கான அனுமதினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப.,அவர்கள் இன்று (13.09.2021) வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் செல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற முதுகலை மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வை தொடர்ந்து மாணவர்களுக்கு சேர்க்கைக்கான அனுமதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.09.2021) வழங்கினார்.

2021-2022 ஆம் ஆண்டிற்க்கான முதுகலை மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு கல்லூரி அரங்கத்தில் நடைபெற்றது.இந்த கல்லூரியில் உள்ள முதுகலை பாடப்பிரிவுகளான தமிழ்,ஆங்கிலம், கணிதம்,வணிகவியல் போன்ற துறையில் அரசு நிர்ணயிக்கப்பட்ட இடங்கள் அனைத்து பாடப்பிவுகளுக்கும் தலா 35 இடங்கள் வீதம் 140 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மேலும் முதுகலை தமிழ் இலக்கியம் பயில்வதற்கு விண்ணபித்த மாணவர்களின் கலந்தாய்வில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 140 மாணவர்களுக்கு இந்த ஆண்டிற்க்கான முதுகலை பட்டபடிப்பு சேர்க்கைக்கான அனுமதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்த கலந்தாய்வில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் டாக்டர்.வி.ஜெயராஜ், தமிழத்துறை தலைவர் முனைவர் ஆர்.செல்வமணி, கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**